யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | சித்திரக்கலை - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- ➢ ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி - I

❖ *01* தொடக்கம் *05* வரையான வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.



**A**



**B**



**C**



**D**



**E**

*01)* எழுத்து **A** யினால் காட்டப்படும் தகிட்டு தீவு பெண்கள்
- *(1)* போல்கொகானின் ஓவியமாகும்.
- *(2)* கிளொட் மொனேயின் சித்திரமாகும்.
- *(3)* வின்சன்ட் வன்கோவின் சித்திரமாகும்.
- *(4)* ஜோர்ஜஸ் பிராக்கின் சித்திரமாகும்.
- *(5)* ஒகஸ்ட் றெனோவின் சித்திரமாகும் (.......)

*02)* எழுத்து B யினால் காட்டப்படும் ஜே. டீ. ஏ. பெரேராவினால் வரையப்பட்ட ஓவியம்
- *(1)* டேசி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- *(2)* கமிலி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- *(3)* நாயகி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- *(4)* நடனமாது எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- *(5)* எலீன் எனப் பெயரிடப்பட்டுள்ளது. (.......)

*03)* எழுத்து C இனால் காட்டப்படும் நடனமாதர்களின் பரந்து விழுந்து கிடக்கும் ஆபாசத் தோற்றம்
- *(1)* அல்பேட் தரம்சிறியினால் சேதவன்னே பான்சாலையில் வரையப்பட்ட சித்திரம்
- *(2)* எம். சார்லிஸ் இனால் திம்பிரிகஸ்யாவில் உள்ள அசோகராமயத்தில் வரையப்பட்ட சித்திரம்
- *(3)* சோழியஸ் மெண்டிஸ்சினால் கிரியுள்ள மத்தேபொல விகாரையில் வரையப்பட்ட சித்திரம்
- *(4)* மஞ்சுசிறியினால் வரையப்பட்ட பௌத்த சித்திரம்
- *(5)* சோமபந்து வித்தியாபதியினால் வரையப்பட்ட பெல்லன்வில விகாரை ஓவியம் (.......)

04) எழுத்து D இனால் காட்டப்படும் ஓவியம் தொடர்பான சிறப்பான விமர்சனம்
  (1) மறுமலர்ச்சிக் காலத்திற்குரிய சிறந்த படைப்பு
  (2) பிரஸ்கோ வகை ஓவியமாகும்
  (3) மனித உருவங்கள் சிற்பங்களில் பண்பினை வெளிப்படுத்தியிருத்தல்
  (4) உரோம் சிஸ்ரைன் தேவாலய கூரை ஓவியமாகும்
  (5) லியானோ டாவின்சியின் படைப்புகளில் ஒன்றாகும் (.......)

05) எழுத்து E இனால் காட்டப்படும் ஓவியம்
  (1) H. A கருனாரத்தினாவினால் படைக்கப்பட்டது
  (2) டேவிற் பெயின்டரினால் ஆக்கப்பட்டது
  (3) அமரசேகர முதலியாரினால் ஆக்கப்பட்டது
  (4) சோமபந்து வித்தியாபதியினால் ஆக்கப்பட்டது
  (5) P. மஞ்சுசிறியினால் ஆக்கப்பட்டது (.......)

❖ ***06 - தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

06) தாவரவியல் (பூங்கா) சிலையொன்றின் நிர்மாணத்தின் போது மிகக் கவனம் செலுத்த வேண்டியது
  (1) முன்பக்கத் தோற்றம் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தி உருவங்களை வெளிப்படுத்திக் காட்டுதலில் ஆகும்.
  (2) உருவங்களின் வெளிப்பாடு சமனிலையில் பரந்து காணப்படும் விதத்தில் எடுத்துக் காட்டுவதில் ஆகும்.
  (3) அளவில் பெரிதாக நிர்மாணிப்பதில் ஆகும்.
  (4) எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும் அழகு வெளிப்படும் விதத்தில் உருவங்களைச் சமனிலையில் எடுத்துக் காட்டுவதில் ஆகும்.
  (5) யதார்த்தமான உருவங்களைக் கொண்டதாக நிர்மாணித்தலில் ஆகும். (.......)

07) தூய்மையான நீர்ச்சாய ஊடகமொன்றின் விசேடமான இயல்பு
  (1) வர்ணங்களைத் தூரிகைத் தடங்களாகப் பயன்படுத்தலாகும்.
  (2) வெள்ளை வர்ணத்தைக் கலவையாகப் பயன்படுத்தலாகும்.
  (3) ஒத்த வர்ணங்கள் பிரகாசமாகத் தெரியும் வகையில் பயன்படுத்தலாகும்.
  (4) வெளிப்படையாகத் தெரியும் வகையில் வர்ணங்களைப் பயன்படுத்தலாகும்.
  (5) பிரகாசமான வர்ணங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் பயன்படுத்தலாகும். (.......)

08) பொருளொன்றைத் திட்டமிடும் போது பின்வரும் எக்காரணி தொடர்பாக மிக அவதானமாக இருக்க வேண்டும்?
  (1) மனங்கவர் நிறைவினைக் கொண்டதாக இருப்பதிலாகும்.
  (2) குறைந்த விலையில் விற்கக்கூடியதாக இருப்பதிலாகும்.
  (3) நிர்மாணித்தலுக்கும் பாவனைக்கும் இலகுவாக இருப்பதிலாகும்.
  (4) இலகுவாக ஆக்கக்கூடியதாக இருப்பதிலாகும்.
  (5) அழகிய வர்ணங்களைக் கொண்டதாக இருப்பதிலாகும். (.......)

09) பிரகாசமான சிவப்பு நீர் வர்ணத்திற்கு வெள்ளை வர்ணத்தை சமமான அளவு கலந்தால் நடைபெறுவது
  (1) வர்ணத்தின் வெளிப்படையாகத் தெரியும் தன்மை உறுதிப்படுத்தப்படுதலாகும்.
  (2) வர்ணத்தின் பலம் அதிகரித்தலாகும்.
  (3) பூசுதல் மிக இலகுவாய் அமைதலாகும்.
  (4) வேறொரு நிறத்திற்கு மாறுதலாகும்.
  (5) வர்ணத்தின் ஒரு பளிச்சிடும் வகை உருவாகுதலாகும். (.......)

10) புடவைகளுக்கு மூட்டற்ற வடிவங்களைப் பயன்படுத்தி பரவலடையும் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும் போது அதன் அலங்காரம் தொடர்பில் எந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்?

(1) வர்ண அலங்காரத்திலாகும்.

(2) அச்சிடலின் இலகு தன்மையிலாகும்.

(3) வர்ணங்களின் கலவையிலாகும்.

(4) கோலம், அலங்காரத்தின் தன்மை என்பவற்றிலாகும்.

(5) வடிவங்களின் முறையான பொருத்தப்பாட்டிலாகும். (.......)

❖ **11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

11) முன்னால் காட்டப்பட்டுள்ள எச்சங்களான தூண்களைக் கொண்ட கட்டட நிர்மாணம்




(1) பழமையான கிரேக்கக் கட்டடக் கலையில் பயன்படுத்தப்பட்ட கட்டடக் கலை நுட்பங்களின் ஒரு பருவத்தினை எடுத்துக்காட்டுகிறது.

(2) கிரேக்க, உரோம கட்டடக் கலைகளில் பயன் படுத்தப்பட்ட உறுப்புகளை எடுத்துக் காட்டுகிறது.

(3) கிரேக்கக் கட்டடக் கலையில், ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டடக்கலைப் பண்புகளை எடுத்துக்காட்டுகிறது.

(4) கட்டடங்களின் அலங்காரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க அயோனிக் நுட்ப முறையிலான தூண்களைக் கொண்ட நிர்மாணிப்பாகும்.

(5) கிரேக்கக் கட்டடக் கலையின் முன்னேற்றகரமான பருவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொரிந்தியன் தூண்களைக் கொண்ட கட்டட நிர்மாணிப்பாகும். (.......)

12) 

இங்கு காட்டப்பட்டுள்ள கட்டத்திற்கான திட்ட அமைப்பு (plan) வெளிப்படுத்தும் கட்டட வகை

(1) பதனாகர (2) பிலிமகெய

(3) போதிகர (4) சைத்தியகர

(5) உபதேசகர (.......)

13) இங்கு காட்டப்பட்டிருக்கும் செதுக்கல்



(1) போதி மரத்தினை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

(2) ஜாதக கதையின் ஒரு பகுதியாகும்.

(3) நுணுகிய செதுக்கல் அம்சத்தைக் கொண்டது.

(4) இந்திய செதுக்கல்களில் முக்கிய அம்சங்களாகும்.

(5) புத்தபெருமானை குறியீடாகக் காட்டும் சந்தர்ப்பமாகும். (.......)

14) இங்கு காட்டப்பட்டுள்ள ஓவியப் பகுதி



(1) எகிப்திய ஓவியத்தின் பகுதியாகும்.


(2) கிரேக்க ஓவியத்தின் பகுதியாகும்.

(3) மொகலாய ஓவியத்தின் பகுதியாகும்.

(4) அஜந்தா ஓவியத்தின் பகுதியாகும்.

(5) சீனா ஓவியத்தின் பகுதியாகும். (.......)

15) கீழ் காணப்படும் படங்கள் ஐந்தையும் நன்றாக அவதானித்து சரியான விடையினை தெரிவு செய்க.




ஒரு பக்கம் திறந்து உள்ள 5 பெட்டிகள் கண்மட்டத்தின் கீழ் உள்ள ஆதாரத்தின் மீது வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சரியான தூரதரிசனமும், கண்மட்டத்தில் மிகக் கீழாக இருப்பதும் கூடிய பக்கங்களைக் காட்டுகின்றதுமான படத்தைத் தெரிவு செய்க.

(1) K (2) L (3) M (4) N (5) O (.......)

❖ **16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

16) சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தாய்த் தெய்வ உருவங்கள்
(1) பல்வேறு கற்பாறைகளைப் பயன்படுத்தி செதுக்கப்பட்டுள்ளன.
(2) வெண்கலத்தைப் பயன்படுத்தி வார்ப்புச் செய்யப்பட்ட நிர்மாணிப்புகளாகும்.
(3) களிமண்ணினால் செய்யப்பட்டு, சுடப்பட்ட டெரகொட்டா நிர்மாணிப்பாகும்.
(4) பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டவையாகும்.
(5) மூட்டற்ற வடிவங்களாகச் செதுக்கப்பட்ட சிறிய சிலைகளாகும். (.......)

17) ஒரே பிற்பட்ட மனப்பதிவு வாதக் கலைஞரின் நிர்மாணிப்புகள்
(1) உருளைக்கிழங்கு உண்பவர்கள், மஞ்சள் நிறத்திலான இயேசு என்பனவாகும்.
(2) சைப்பிரஸ் மரங்கள், தஹிட்டியப் பெண்கள் என்பனவாகும்.
(3) இரவு உணவகம், சிறைச்சாலை விறாந்தை என்பனவாகும்.
(4) கார்ட்ஸ் (Cards) விளையாடுவோர், நட்சத்திரங்கள் நிறைந்தவொரு இரவு என்பனவாகும்.
(5) ஆர்லஸ்சிலுள்ள பாலம், விக்டரி மலை என்பனவாகும். (.......)


18) ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட ஓவியங்களையும் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட குகைகளில் காணப்படும் பிராணிகளின் உருவங்களையும் ஒப்பிடும் போது வெளிப்படையாகத் தெரியும் இயல்பு, இலங்கைக் குகைளிலுள்ள பிராணிகளின் உருவங்கள்,
(1) அளவிற் சிறியனவாகும்.
(2) அளவிற் பெரியனவாகும்.
(3) திறந்த வெளியில் வரையப்பட்டுள்ளவையாகும்.
(4) அடிப்படை இயல்புகளைக் கொண்ட குறியீடுகளினாலானவையாகும்.
(5) இயற்கையாக வரையப்பட்டிருக்கின்றவையாகும். (.......)

19) கருத்து வெளிப்பாட்டுச் சித்திர ஒழுங்கமைப்பின் மிக முக்கியமான அங்கம்
(1) வெளிப்படுத்தப்படும் மனித உருவங்கள் இயற்கைத் தன்மையினதாக அமைதலாகும்.
(2) கருத்தும் பாவமும் வெளிப்படுதலாகும்.
(3) தளம் முழுமையாக நிறைந்து காணப்படும் விதத்தில் வெளிப்பாட்டின் கூறுகளைக் கையாளலாகும்.
(4) இயற்கையான தன்மை எடுத்துக் காட்டப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுதலாகும்.
(5) உயிர்த்துடிப்புடன் கூடிய ரேகையைக் கையாளலாகும். (.......)

20) பொலன்னறுவை ‘தலதாமலுவ’ எனப்படும் வழிபாட்டிடத்தில் காணக்கூடிய சமய சார்பான நினைவுச் சின்னங்கள்
(1) ஏழடுக்கு மண்டபம், பத்தசீமா மண்டபம், நிஸ்ஸங்கலதா மண்டபம் என்பனவாகும்.
(2) அட்டதாகே, ஹெட்டதாகே, வட்டதாகே என்பனவாகும்.
(3) தூபராம, லங்காதிலக்க, திவங்கசிலைமனை என்பனவாகும்.
(4) விஜயோத்பாய, நிஸ்ஸங்க மாளிகை, ராஜவேஷிபுஜங்க மண்டபம் என்பனவாகும்.
(5) ரன்கொத் வெஹெர, கிரி வெஹர, பபலு வெஹர என்பனவாகும். (.......)

❖ ***21 தொடக்கம் 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையை F, G, H, I, J ஆகியவற்றால் கீழே காட்டப்பட்டுள்ள சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.***


F


G


H


I


J

21) F இனால் காட்டப்பட்டுள்ள ஆக்கம்
   (1) கோகுல் குகையில் வரையப்பட்டுள்ள எருதின் ஓவியம்
   (2) லஸ்கோ குகையில் வரையப்பட்ட இறந்த மனிதனின் பராமரிப்பு ஓவியம்
   (3) அல்ராமீராக் குகையில் வரையப்பட்ட மாட்டின் ஓவியம்
   (4) யானையின் ஓவியம்
   (5) பொன்டிடுகோமோ குகையில் வரையப்பட்ட யானை ஓவியம் (.......)

22) G இனால் காட்டப்பட்டுள்ள சிற்பம்
   (1) நெபர்ற்றி அரசியின் சிலை கிரேக்கக் கலைக்குரியது.
   (2) நெபர்ற்றி அரசியின் சிலை எகிப்தியக் காலம்
   (3) நெபர்ற்றி அரசியின் சிலை உரோமானியக் காலம்
   (4) நெபர்ற்றி அரசியின் சிலை பைசாற்றியக்குரியது.
   (5) நெபர்ற்றி அரசியின் சிலை பபிலோனியாக்குரியது. (.......)

23) H இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
   (1) மைக்கல் அஞ்சலோவால் வரையப்பட்டது.
   (2) டேவிற் பெயின்ரரால் வரையப்பட்டது.
   (3) லியானோடாவின்சியால் வரையப்பட்டது.
   (4) றபாயேல் சான்சியோவால் வரையப்பட்டது.
   (5) ஜோர்ஜ் பிராக்கால் வரையப்பட்டது. (.......)

24) I இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
   (1) சிகிரியா ஓவியங்களில் ஒன்று
   (2) மிகிந்தலை வாகல்கட ஓவியங்களில் ஒன்று
   (3) மகியங்கனை ஓவியங்களில் ஒன்று
   (4) திவங்கசிலைமனை ஓவியங்களில் ஒன்று
   (5) தம்புள்ள விகாரை ஓவியங்களில் ஒன்று (.......)

25) J இனால் காட்டப்பட்டுள்ள ஓவியம்
   (1) பியேறே ஓகஸ்ட் றெனோர் என்பவரால் வரையப்பட்ட வயலின் வாசிக்கும் பெண்கள்
   (2) எட்கா டெகாவினால் வரையப்பட்ட வயலின் மீட்கும் பெண்கள்
   (3) அல்பிரட் டெகாவினால் வரையப்பட்ட வயலினும் பெண்களும்
   (4) போல் கேகாவினால் வரையப்பட்ட வயலினுடன் பெண் பிள்ளைகள்
   (5) வயலின் மீட்கும் பெண் பிள்ளைகள் என்ற ஓவியம் போல் செசானால் வரையப்பட்டது (.......)

26) மரபு ரீதியான அலங்கார ஆக்க வகைப்படுத்தலுக்கமைவான குறித்தவொரு வகைக்கு உரித்தான அலங்காரங்களின் தொகுதி எது?
   (1) கொடி வலை அலங்காரம் அரும்பு, நாகதல்ல, பூவிதழ்
   (2) கத்திரப் பூ, கத்துருப் பூ, தாழம் பூ, பூவிதழ்
   (3) பிணைந்த அன்னம், சரபென்தியா, கஜசிங்கம், நாரிலதா
   (4) சீன மலர், கடும்புல் மலர், தாழம் பூ, கற்கட்டு
   (5) தனியிழைக் கயிறு, ஈரிழைக் கயிறு, சவடி, பூவும் மொட்டும் (.......)


27) பரிதிவட்டம் வீசுபவன் என்ற கிரேக்க சிலை தொடர்பான மிகப் பொருத்தமான கூற்று
(1) செயல்பாட்டுடன் கூடிய மனித மெய்நிலைகளை சலவைக் கல்லில் சிலையாக வடிப்பதற்கு எடுத்துள்ள முயற்சியாகும்.
(2) கிரேக்க கெலனிஸ்ட் காலத்து சிறந்த சிற்பியின் படைப்பாகும்.
(3) பக்சிரெலஸ் சிற்பியின் உயர்தரப் படைப்பாகும்.
(4) உரோம சிற்பியினால் வார்க்கப்பட்ட வெண்கலச் சிலையாகும்.
(5) கிரேக்க மேன்மைக்கால சிற்பியான அண்டிசோவுடைய படைப்பாகும். (.......)

28) அவுக்கண புத்தர் சிலைகள் தொடர்பான மிகப் பொருத்தமான கூற்று
(1) இயற்கைக் கற்பாறையில் நேரான நிலையில் செதுக்கப்பட்ட சிலை
(2) அநுராதபுரக் காலத்தில் நிறுவப்பட்ட சிலை மனைக்கு உரிய சிலையாகும்.
(3) ஆந்திரா கலை மரபின் கீழ் நிருமாணிக்கப்பட்ட சிறந்த சிலையாகும்.
(4) தாதுசேன அரசன் காலத்தில் நிறுவப்பட்ட காலசேன விகாரைக்குரிய புத்தர் சிலையாகும்.
(5) வெளி இயல்புகளின் படி மாளிகாவில புத்தர் சிலைக்கு சமமான சிலையாகும். (.......)

29) மௌரிய கலைக்குரிய அசோகத் தூண்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டமை
(1) புத்தர் சரிதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நடைபெற்ற நிலையங்களை நினைவு படுத்துவதன் பொருட்டாகும்.
(2) அசோக மன்னனின் கீர்த்தியை நாட்டிற்கு வெளிப்படுத்துவதன் பொருட்டாகும்.
(3) அசோக மன்னனின் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் குறியீடாகக் கொள்வதன் பொருட்டாகும்.
(4) அசோக மன்னனின் தர்ம பிரசார செயற்பாடுகளை நினைவுறுத்துமுகமாகவாகும்.
(5) அசோக மன்னனின் கலிங்கத்து யுத்த வெற்றியை நினைவுறுத்துமுகமாகவாகும். (.......)


30) மகியங்கனையில் தாதுகர்ப்பத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ஓவியங்களிடையே
(1) சசஜாதகத்தைச் சித்திரிக்கும் சித்திரம் ஒன்று காணப்பட்டது.
(2) புத்தர் நிலை அல்லது மாரபராஜயைக் காட்டும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
(3) தபசி பள்ளுக தேபானன் காணப்படும் சித்திரத் துண்டும் கிடைத்துள்ளது.
(4) இந்திரஜால குகைக்கு சக்கர தெய்வம் வருகை தரும் சந்தர்ப்பத்தைக் காட்டும் சித்திரமும் கிடைத்துள்ளது.
(5) தேவர்கள் அமர்ந்திருக்கும் வடிவம் ஐந்தினைக் கொண்ட சித்திரமொன்றும் கிடைத்துள்ளது. (.......)

31) முன்னால் காட்டப்பட்டுள்ள பிரமாண்டமான தேவாலயம்



(1) இரண்டாவது ரமேசஸ் மன்னனின் தேவாலயமாக நைல் நதிப் பள்ளத்தாக்கில் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயமாகும்.
(2) அஸ்வான் அணைக்கரை காரணமாக நீரில் மூழ்கி அழிந்துபோன அபுசிம்பல் தேவாலயமாகும்.
(3) ரமேசஸ் உட்பட நான்கு பாரா தேசத்தவர்களுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம் அகும்.
(4) எகிப்தில் காணப்படும், மலைகளைக் குடைந்து நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு தேவாலயமான அபுசிம்பல் தேவாலயமாகும்.
(5) ஆமன், ராவுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயமாகும். (.......)

32) அருகில் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை



(1) 8 ஆம் நூற்றாண்டில் மகாயான பௌத்த எண்ணக்கருவுக்கமைய ‘புதுருவகல’ என்ற கற்பாறையில் செதுக்கப்பட்டதாகும்.
(2) புதுருவகல கற்குன்றில் செதுக்கப்பட்டுள்ள மகாயான சிலைகளுள் ஒன்றாகும்.
(3) சஸ்சேருவ கற்குன்றில் ஒரு பகுதி வெளிப்பட்டுத் தோன்றும் விதத்தில் செதுக்கப்பட்டதாகும்.
(4) புடைப்புருச் செதுக்கோவியமாகச் செதுக்கப்பட்ட அனுராதபுரத்தில் உள்ள ஒரேயொரு புத்தர் சிலையாகும்.
(5) இலங்கையில் மகாயான பௌத்த எண்ணக்கருவுக்கமைய செதுக்கப்பட்டுள்ள சிலைகளுள் புத்தரை நாடும் ஒருவரின் மிகப் பெரிய சிலையாகும். (..........)

33) அருகில் காட்டப்பட்டுள்ள இசுறுமுனியவில் அமைந்துள்ள கல்லில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கலினால்



(1) தீயிற்கு அதிபதியான அக்கினி பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
(2) நீருக்கு அதிபதியான வர்ண பகவான் எடுத்துக் காட்டப்படுகிறார்.
(3) சூரிய வம்சத்தவனான அர்ச்சுனன் நினைவூட்டப் படுகிறான்.
(4) அக்கினி பகவானும் வர்ண பகவானும் சித்திரிக்கப் படுகின்றனர்
(5) சித்தார்த்தன் நினைவூட்டப்படுவதுடன் ‘கந்தக’ எனும் குதிரையும் நினைவூட்டப்படுகின்றது. (.......)

34) அருகில் காட்டப்படும் சிலை



(1) லூவர் நூதனசாலையில் காணப்படும் சிலையாகும்.
(2) சாந்த மரியா டெலா மாளிகையில் காணப்படும் சிலையாகும்.
(3) சாந்த பீற்றர் சதுக்கத்தில் காணப்படும் சிலையாகும்.
(4) 11 ஆவது யூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறை மண்டபத்துடன் தொடர்புடைய சிலையாகும்.
(5) மெடிச்சி குடும்பத்து நினைவு மண்டபத்தில் காணப்படும் சிலையாகும். (.......)

35) அருகில் காட்டப்படும் பெண் சிலையானது



(1) வானவன் மா தேவியை வெளிக்காட்டும் சிலையாகும்.
(2) பார்வதி தேவியை வெளிக்காட்டும் தெய்வச் சிலையாகும்.
(3) தாராதேவியைக் காட்டும் சிலையாகும்.
(4) இந்து சமயத்து வெண்கலச் சிலையாகும்.
(5) திரிபங்க நிலையில் உள்ள பெண் சிலையாகும். (.......)

❖ **வினா 36 தொடக்கம் 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்குரிய மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36) மேற்தரப்பட்ட கலைப்படைப்பு எக்கலைஞனின் படைப்பாக்கமாகும்?
(1) கமிலஸ் பியரே (2) போல் செசான் (3) எட்வாட்மனே
(4) எட்காட் டெகால் (5) போல் கெயின் (.......)

37) இச்சித்திரம் வெளிப்படுத்தும் கலைமரபு
(1) ஒளியியல் வாதம் (2) நிழலியல் வாதம் (3) யதார்த்த வாதம்
(4) மாயா வாதம் (5) கனவடிவ வாதம் (.......)

38) இச்சித்திரம் வெளிப்படுத்தும் உட்கருத்து
(1) பலே நடன பாடம் / ஒத்திகை
(2) பலே நடனம்
(3) பலே நடன அரங்கேற்றம்
(4) பலே நடன ஒப்பனை
(5) பலே நடன வேகம் (.......)

39) இச்சித்திரம் பூர்த்தியாக்கப்பட்ட ஊடகம்
(1) நீர்வர்ணம் (2) தைலவர்ணம் (3) பஸ்ரல் வர்ணம்
(4) தூள்வர்ணம் (5) இயற்கை வர்ணம் (.......)

40) இச்சித்திரத்தின் உருவ ஒழுங்கமைப்பு தொடர்பான சிறப்பான விமர்சனம்
(1) ஓவிய வெளி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.
(2) ஓவிய வெளி பகுதியாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.
(3) ஓவிய வெளி கையாளுகையில் குறைபாடுகள் காணப்படுகிறது.
(4) ஓவிய வெளியில் சமநிலையற்ற உருவப் பரம்பல் ஊடாக தொனிப்பொருள் தெளிவாக்கப் பட்டுள்ளது.
(5) ஓவிய வெளி குறியீட்டு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (.......)

## பகுதி - II

### உப பகுதி 'அ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

01) அனுராதபுரக்கால சிற்ப ஓவிய வளர்ச்சிக்கு குப்தர் கால குருகுலம் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியது.

(i) அனுராதபுரக் காலத்திற்குரிய குப்த கலைமரபு சிற்பங்கள் நான்கு தருக.

(ii) குப்தர் கால புத்த சிலைகளில் காணக்கூடிய பண்புகளை அனுராதபுரக் காலத்திற்குரிய புத்தர் சிலைகளை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(iii) காவியப் பெண்களைப் படைப்பதில் குப்தர் கால கலைஞர்கள் தனித்துவமான சிறப்பை சிகிரிய ஓவியங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். விமர்சிக்குக.

02) இலங்கை பௌத்த கட்டடக் கலையில் "கர" என்ற கட்டடக் கலை அம்சம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது.

(i) "கர" வகை கட்டடங்களுக்கு உதாரணம் நான்கு தருக.

(ii) மேற்படி வகை கட்டடங்களின் வாயிலில் காணப்படும் அலங்கார வேலைப்பாடுகள் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iii) தூபியில் பாதுகாப்பிற்கென கட்டப்பட்ட வட்டதாமனைகள் பிற்காலத்தில் பல்வேறு மாற்றங்களை கண்டமையை மெதிரிகிரிய, பொலநறுவை வட்டதாமனை, கடலதெனிய விஜய உத்பாய போன்ற கட்டடங்களை அடிப்படையாகக் கொண்டு விமர்சிக்குக.

### உப பகுதி 'ஆ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

03) பல்வேறு ஊடகங்களை கையாண்டு கலைப் படைப்புக்களை உருவாக்குவதில் சிந்துவெளி நாகரிக மக்கள் திறன் பெற்றுள்ளதை அவர்களது ஆக்கங்கள் நிரூபிக்கின்றது.

(i) சிந்துவெளி மக்கள் கலையாக்கங்களை உருவாக்க பயன்படுத்திய ஊடகங்கள் 4 தருக.

(ii) இந்த நாகரிகத்திற்குரிய நடனப் பெண் சிலையின் கலைத்துவப் பண்புகளை வெளிப்படுத்த ஊடகத்தை பயன்படுத்திய விதத்தினை சுருக்கமாக எடுத்துக் கூறுக.

(iii) சமயத் தேவைகளின் பொருட்டு கலைப் படைப்புக்கள் சிந்துவெளியில் உருவாக்கப்பட்டமை தொடர்பாக விமர்சனம் ஒன்றை முன்வைக்குக.

04) பாரதத்தில் காந்தார பிரதேசத்தில் 1ம் கனிஷ்ட மன்னன் காலத்தில் புத்தரை உருவாக செதுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

(i) புத்த உருவத்திற்கு பதிலாக பண்டைய பாரத செதுக்கலில் பயன்படுத்திய குறியீடுகள் 4 தருக.

(ii) காந்தாரத்தில் புத்த சிலை முதன் முதலில் காட்டப்பட்ட சந்தர்ப்பத்தினைக் குறிப்பிட்டு அதற்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) "காந்தார செதுக்கல்களிடையே புத்தரின் பிறப்பு எனும் செதுக்கல் இயற்கைக்கு மாறுபட்ட விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது" இக் கூற்றினை விமர்சிக்குக.

## உப பகுதி ‘இ’

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

*05)* இறப்பின் பின் வாழ்வு என்ற அடிப்படையில் எகிப்தியக் கலை வளர்ச்சி பெற்றது.

(i) எகிப்திய சிலைகள் நான்கின் பெயரினை எழுதுக.

(ii) மஸ்டப்பா (Mastap), கா (Ka) என்ற எண்கருக்களை தொடர்புபடுத்தி சுருக்கமான விமர்சனத்தை முன்வைக்குக.

(iii) பிரமிட்டின் (Pyramid) உட்புற வெளிப்புற கலையங்கள் நுட்பங்கள் பற்றி விமர்சிக்குக.

*06)* மறுமலர்ச்சிக்கால மரபுகளை நிராகரிக்கும் புதிய ஓவியச் சம்பிரதாயம் மனப்பதிவு வாதத்துடன் ஆரம்பமாகியது.

(i) மறுமலர்ச்சிக்கால படைப்புக்கள் நான்கு தருக.

(ii) மறுமலர்ச்சி மரபு வாதிகளால் நிராகரிக்கப்பட்ட எட்வாட் மனேயின் படைப்புக்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவை நிராகரிக்கப்பட்டமைக்கான காரணத்தைச் சுருக்கமாக தருக.

(iii) மறுமலர்ச்சிக்கால ஓவிய மரபுகளில் இருந்து மனப்பதிவு வாத மரபுகள் வேறுபடும் விதத்தினை உதாரணத்துடன் விளக்குக.

The National e-learning Portal for The General Education